OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11411

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.06.2026

Accepted: 25.07.2026

Published: 01.10.2026

Citation:
Sankar, M. "Silappathikaram from the Perspective of Oral-Formulaic Theory." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 38–56.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11411

*Corresponding Author:
sankartamilskc@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Silappathikaram from the Perspective of Oral-Formulaic Theory

M. Sankar
Assistant Professor, Department of Tamil
Sri Kaliswari College (Autonomous), Sivakasi
https://orcid.org/0009-0003-3260-8483

Abstract
Silappathikaram is one of the most celebrated epics in Tamil literature. It is a literary masterpiece that reflects the social, cultural, political, and moral values of the ancient Tamil people. The epic not only narrates the story of Kannagi and Kovalan but also presents a comprehensive picture of the life, customs, beliefs, and traditions of Tamil society. Owing to its literary richness and historical significance, Silappathikaram has been studied from various perspectives by numerous scholars. Among the many dimensions explored in this epic, the present study focuses on the conversational and communicative patterns embedded within the text. It examines how dialogue functions as a narrative device and how linguistic interactions contribute to the development of characters, themes, and events. The study seeks to identify the discourse structures that emerge through conversations and to understand their role in shaping the overall meaning of the epic.The research further investigates the linguistic features found in the dialogues, including speech forms, modes of communication, contextual expressions, and interactional strategies. Particular attention is given to the ways in which characters express emotions, intentions, and social relationships through language. By analysing these discourse elements, the study aims to reveal the deeper communicative mechanisms that operate within the narrative framework of Silappathikaram. In addition, the research explores how conversational exchanges reflect social hierarchy, cultural norms, ethical values, and interpersonal relationships. The study adopts an Oral – Formulaic Theory approach to demonstrate that the epic is not merely a literary text but also a valuable source for understanding the communicative practices and socio-cultural dynamics of ancient Tamil society.

Keywords: *Silappathikaram, Oral-formulaic Theory, Spoken Interaction, Communication Patterns, Linguistic Features, Narrative Structure.*

References

1. Dhananjayan, A. Folk Aesthetics in Silappathikaram, New Century Book House (P) Ltd., Chennai, 2023.
2. Jayakrishnan, P. Silappathikaram and Kannagi Worship, New Century Book House (P) Ltd., Chennai, 2023.
3. Kailaasabathi, K. Tamil Heroic Poetry, Kumaran Puththaga illam, Colombo – Chennai, 2006.
4. Lourdu, D. Folklore: Some Fundamentals, Folklore Research Centre, Palayamkottai, 2008.
5. Shanmugasundaram, S. Kannagi Stories Through the Ages, Kavya, Chennai, 2010.

6. Subramanian, P. Silappathikaram: A Folkloristic Perspective, Kavya, Chennai, 2023.
7. Subramanian, S.V. Tholkappiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, 2009.
8. Tamilavan, Sangam Literature from the Perspective of Oral-Formulaic Theory, Central Institute of Classical Tamil, Chennai, 2023.

வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சிலப்பதிகாரம்

மு. சங்கர்
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

ஆய்வுச் சுருக்கம்
சிலப்பதிகாரம் கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரின் வாழ்க்கையைக் கூறினாலும் நாட்டார் மரபிற்கேற்ற கூறுகளைத் தன்னகத்தே கொண்ட ஒப்புயர்வற்றக் காப்பியமாகவும் திகழ்கின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த காப்பியத்தை நாட்டார் ஆய்வுக் கோட்பாடுகளுள் ஒன்றான வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டோடு பொருத்திப் பார்த்துச் சிலப்பதிகாரம் நாட்டார் இலக்கியமே என நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமும் பயனும் ஆகும். வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு முன்வைக்கும் கருத்தியல்களாவன திரும்பத் திரும்ப வரல், அடுக்கிக் கூறல், விளித்தல் மரபு, அடைமொழிகள் ஆகியவற்றைச் சிலப்பதிகாரத்தோடு ஒப்பு நோக்கி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.
முக்கியச் சொற்கள்: *சிலப்பதிகாரம், வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு, கருத்தியல்கள், நாட்டார் மரபு.*

தோற்றுவாய்

தமிழ்க் காப்பியப் பரப்பில் கொடு முடியாய்த் திகழ்வது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் சிலப்பதிகாரம். இக்காப்பியம் குறித்துப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றுள் கோட்பாட்டு ஆய்வுகள் மிகச் சிலவே. சிலப்பதிகாரத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்குக் கோட்பாட்டியல் ஆய்வுகள் மிக அவசியம். அவ்வகையில் இக்கட்டுரை வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு எனும் மேற்கத்தியச் சிந்தனையில் தோன்றிய கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு எழுதப்படுகின்றது.

நோக்கம்

தே. லூர்து நாட்டார் வழக்காற்றியலின் சில அடிப்படைகள் என்ற நூலில், முதலில் வாய்மொழி இலக்கியக் கூறுகள் எவ்விலக்கியங்களில் காணப்படுகின்றன என்று அடையாளம் காணப்பெறல் வேண்டும். பின்னர் அவற்றை எடுத்து விளக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது இலக்கிய வடிவங்களின் வளர்ச்சியையும் கருத்துகளின் வளர்ச்சியையும் அறியமுடியும் (தே.லூர்து, *2008 : 67*) என்கின்றார். இவரது இக்கூற்றே இக்கட்டுரையின் அடிப்படையாக அமைகின்றது.

முன்னாய்வுகள்

சிலப்பதிகாரம் வாய்மொழி மரபும் எழுத்து மரபும் இணைந்த காப்பியமாகத் திகழ்கின்றது. இக்காப்பியத்தில் இடம்பெறும் நாட்டுப்புறக் கூறுகளின் சீர்மையையும் நீர்மையையும் சிலர் ஆய்ந்துள்ளனர்.

காவ்யா சு.சண்முகசுந்தரம் கண்ணகிக் கதைகள் - காலந்தோறும் (2010) இந்நூலில் கலாச்சார அடையாளமாகக் கண்ணகிக் கதைகள் விளங்குவதை ஆய்ந்துள்ளார். வாய்மொழி வழக்காறுகளில், நாடக அரங்குகளில், வெள்ளித்திரைகளில், புனை கதைகளில், கவிதைப் பிரதிகளில், கேரள நாட்டில், இலங்கைத் தீவில், கலை இலக்கிய வடிவங்களில் கண்ணகிக் கதைகள்

வழங்கப்படுகின்ற விதத்தைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

ப.ஜெயகிருஷ்ணன் சிலப்பதிகாரமும் கண்ணகி வழிபாடும் (2023) என்ற நூலில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் நாட்டுப்புறக் கூறுகள் பற்றி ஆய்ந்துள்ளார். இதில், நாட்டுப்புறப் பாடல்கள், வில்லுப் பாட்டு, கண்ணகி புலம்பல், ஒப்பாரிப் பாடல்கள், சிலப்பதிகாரத்தில் கூத்து மரபு, மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்கள், சிலம்பில் ஆவி வழிபாடு, கோயில் வழிபாடு, பலியிடுதல், நடுகல், நம்பிக்கைகள், சடங்குகள், கனவுகள், தீய நிமித்தங்கள் உள்ளிட்ட தலைப்புகளில் சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறக் கூறுகள் இடம்பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் நாட்டார் அழகியல் (2023) என்ற நூலில் ஆ.தனஞ்செயன் சிலப்பதிகாரத்தில் நாட்டார் வழக்காற்றியலும் அழகியலும் வெளிப்படும் பாங்கினைச் சுட்டி காட்டியுள்ளார். இந்நூலில் இடம்பெற்றுள்ள ஏழு கட்டுரைகள் வாய்மொழி மரபு பற்றியும் வாய்மொழிக் கதைகளின் பயன்பாடு பற்றியும் நாட்டார் கதைக் கூறுகள் பற்றியும் எடுத்து உரைக்கின்றன. இந்நூலின் பல இடங்களில் வாய்மொழி மரபின் கூறுகள் சொல்லப் பட்டுள்ளன.

பெ.சுப்பிரமணியன் சிலப்பதிகாரம் - நாட்டுப்புறவியல் நோக்கு (2023) எனும் இந்நூலில் இடம் பெறும் கட்டுரைகள் ஒவ்வொன்றும் நாட்டுப் புறவியல் கூறுகளை விளக்கி நிற்கின்றன. இவற்றில் வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, இக்கட்டுரை வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டை முன்வைத்துச் சிலப்பதிகாரத்தை ஆராய முற்படுகின்றது.

வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு

வாய்பாடு என்பது ஒரே விதமான யாப்பு வடிவத்தில் அல்லது சந்தத்தில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் சொற்றொடர்களைக் குறிக்கும். வாய்மொழி வாய்ப்பாட்டுக் கட்டமைப்பினை விளக்கும்போது சில காட்சிகளை அல்லது நிகழ்வுகளை விவரிக்கப் பயன்படுத்தப்படும் தொகுப்பே ‘வாய்ப்பாடு’ ஆகும் என்று ரோசன் பரீன் விளக்கம் தருகின்றார்.

ஒரு வாய்மொழிப் புலவனுக்கு வசதியான படைப்பாக்கக் கூறுகளுள் தலைசிறந்தது வாய்ப்பாடாகும். ஆயத்தமின்றி உடனே பாடப்படும் வீரநிலைப் பாட்டு முழுமையும் அதனைச்சார்ந்திருப்பது. உண்மையில் எல்லா வாய்மொழிப் புலவர்க்கும் இது தவிர்க்க இயலாதது என்றும் வாய்ப்பாடு ஒரு கருத்தைத் தகுதியான சொற்களில் கூறுவதுடன் பாடலில் உரிய இடத்தை நிரப்புகிறது. முன்னும் பின்னும் அமைந்த தொடர்களோடு பொருந்திக் கொள்ள இசைந்து வாக்கியத்தை உருவாக்குகின்றன என்றும் வாய்ப்பாட்டை விளக்கிக் கூறுகின்றார் க.கைலாசபதி (198: 2006).

ஒரு குறிப்பிட்ட யாப்பு முறையில் சில வார்த்தைக் குழுமங்கள் மீண்டும் மீண்டும் ஒன்று போல் வருவது வாய்ப்பாட்டுக் கோட்பாடு எனலாம். இந்த வாய்ப்பாடு, வாய்மொழியில் புழங்கிய கவிதைகளிலிருந்து வருவதென்றோ அல்லது இன்றைய வாய்மொழிக் கவிதைகளில் காணப் படுகிறதென்றோ விளக்குவது வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடாகும் என்று வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டை விளக்குவார் தமிழவன் (2021: 3).

இக்கோட்பாட்டை ஐரோப்பிய செவ்வியல்வாதிகளான மில்மன் பரியும் ஏ.பி.லார்டும் உருவாக்கினர். இக்கோட்பாடு நாட்டுப்புறவியல் ஆய்வுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்கக் காவியங்களான இலியட், ஒடிசி ஆகிய காவியங்களைப் பற்றி மில்மன் பரி ஆராய்ந்தார். ஹோமரின் காவியங்களில் அடிக் கடி வெளிப்படும் பெயரடை அமைப்புகளையும் (Adjectives) மறுதொடர்களையும் ஒரேவிதமான

சொற்றொடர்களையும் விளக்கினார். இதன் மூலம் ஹோமர் ஒரு மரபுக் கவிஞர் அல்ல. வாய்மொழிக் கவிஞன் என்பதை நிறுவினார். அவரைத் தொடர்ந்து ஆல்பிரட் பி.லார்டு, 1933 முதல் 1935 வரை யுகோஸ்லேவேக்கியா என்ற நாட்டிற்குச் சென்றார். அங்கு மிகப் பல பாடகர்களைச் சந்தித்து அவர்களிடையே வழங்கிய வாய்மொழிக் காவியங்களை ஒலிநாடாவில் பதிவு செய்தார். அதை 1960-இல் 'Singer of Tales' என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். இதில் வடிவம் சார்ந்த சிறு கூறுகளை வாய்ப்பாடுகள் என்றும் உள்ளடக்கம் சார்ந்த சிறு கூறுகளை அடிக் கருத்துகள் என்றும் கூறினார்.

இவ்விருவருக்கும் முன்னரே, சி.எம்.பௌரா தமது 'Heroic Poetry' என்ற நூலில் ஹோமரின் இலியட் மற்றும் ஒடிசியை ஆராய்ந்தார். இந்நூலின் ஆறாவது இயலான The Technique of Composition: Language என்பதில் ஒரு பாடகன் வாய்ப்பாடுகளை எவ்வாறு பாட்டுக் கட்டிப் பாடுகிறான் என்பதை ஆராய்ந்தார். இதில் பெயரடைகள், அரையடி வாய்ப்பாடுகள், தொடை அமைப்பு கொண்ட வகை மாதிரிகள் ஆகியவற்றை விளக்கினார். இந்நூலின் ஏழாவது இயலான The Technique of Composition: Devices of Narrative என்பதில் திருப்புகள், உவமை மற்றும் கதையைத் தொடங்கும் முறைகள் ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்துள்ளார்.

சிலப்பதிகார வடிவங்கள்

சிலப்பதிகாரக் கதையினை வாய்மொழி வடிவங்கள் என்றும் ஏட்டிலக்கிய வடிவங்கள் என்றும் இரண்டு நிலைகளாகப் பகுக்கலாம்.

வாய்மொழி வடிவங்கள்

சிலப்பதிகாரம் சார்ந்த கதைகள் தமிழகத்தில் மட்டுமின்றிக் கேரளம், இலங்கை ஆகிய பகுதிகளிலும் பரவியுள்ளன.

1. கோவலன் கதை - புகழேந்திப் புலவர் (ஆசிரியர்) - சூ.நிர்மலாதேவி (பதிப்பு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. கண்ணகி கதை: வில்லுப்பாட்டு - அ.க.நவநீத கிருட்டிணன் (பதிப்பு) - திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
3. கோவிலன் கர்ணகி - வேலூர் நாராயண சாமி பிள்ளை, புவனேஸ்வரி அச்சகம் வெளியிட்டுள்ளது.
4. கோவலன் கதை - வடமராட்சி கிழக்கு குடாரப்பு கந்தர் வெற்றிவேலுப் புலவர் பாடியது - சிதம்பரம்பிள்ளை பசுபதி (பதிப்பு)
5. மாவீட்டபுரம் வீணியவரை கண்ணகை அம்மை கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு - த.சண்முகசுந்தரம் - இலங்கை - தெல்லிப்பழை, அருள் வெளியீட்டகம்.
6. கோவலன் நாடகம் - தெல்லிப்பழை, தி அமெரிக்கன் சிலோன் மிஷன் பிரஸ்.
7. கோவலன் நாடகம் (முல்லை மோடி) - மயில்வாகனம் இரகுநாதன் (பதிப்பு) - ஜப்னா, எஸ்.எஸ்.ஆர். பிரிண்டர்ஸ்.

கருத்தியல்கள்

வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு முன்வைக்கும் கருத்தியல்களாவன,

1. திரும்பத் திரும்ப வரல்
2. அடுக்கிக் கூறல்
3. விளித்தல் மரபு
4. அடைமொழிகள் என்பனவாகும்.

இவற்றைச் சிலப்பதிகாரத்தோடு ஒப்பு நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

திரும்பத் திரும்ப வரல்

வாய்மொழி வாய்ப்பாட்டு மரபில் 'இணைநிலை தன்மை' (Parallelism) முக்கியக் கூறாகும். இதில் ஒரே வாக்கியத்திற்குள் ஒரு சொல்லையும் சொற்றொடரையும் திரும்பத் திரும்பச் சொல்வதும் ஒரு குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்திச் சொல்வதும் காப்பியத்தைச் சிறப்பாகப் படிக்க ஓர் ஓட்டத்தை வாசகனுக்கு உருவாக்க வேண்டும் என்பதற்காகத் திரும்பத் திரும்பச் சொல்வதும் அடங்கும்.

நாட்டார் கதைப்பாடல்களைப் பாடுவோர் சில அடிகளைத் திரும்பத் திரும்பப் பாடும் போது அவ்வடிகள் கேட்போருக்கு மட்டுமின்றிப் பாடுவோருக்கும் மிகுந்த உதவியாக இருக்கும். இந்நிலையையே சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாடல், குரவை, மாலை, வரி ஆகிய அமைப்புகளில் மீண்டும் மீண்டும் வரும் அமைப்பைப் பயன்படுத்தியுள்ளார். கேட்டுக் கேட்டு மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டிருந்தலால் இந்த மீண்டும் வரல் உத்தியை இளங்கோ பயன்படுத்திருக்கலாம். திரும்பத் திரும்ப வரல் அமைப்பு பற்றிக் க.கைலாசபதி கூறுகையில், அகவல், வஞ்சிப் பாடல்களில் ஓரடிக்கு மேலாகத் தொடரும் கூறியது கூறல்கள் ஓரடி வாய்பாட்டின் விரிவாகவும் நடையியல் உத்தியின் உள்ளிணைந்த ஒரு கூறாகவும் அமைவன *(2006: 237)* என்கின்றார். இக்கூற்று முற்றிலும் ஏற்புடையதே சிலப்பதிகாரத்தில் பெரும்பான்மையும் அகவல் அமைப்பே பயிலக்காணலாம். நடையியல் உத்திக்காகவும் இளங்கோவடிகள் திரும்பத் திரும்ப வரும் அமைப்பைக் கையாண்டிருக்கலாம்.

சிலப்பதிகாரத்தில், ஒரே அடி மீண்டும் அடுத்த அடியிலும் அல்லது மூன்றாம் அடியிலும் நான்காம் அடியிலும் பயின்று வருகின்றதைக் காணலாம். இவ்வமைப்பில் எந்த மாற்றமும் இருக்காது. இவ்வமைப்பைக் கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, வழக்குரை காதை, ஊர்சூழ் வரி, குன்றக் குரவை ஆகிய காதைகளில் பார்க்கலாம்.

தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
(சிலப்.7:20)

அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
(சிலப்.7:21)

புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
(சிலப்.7:22)

சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
(சிலப்.7:23)

அடையல் குருகே அடையல் எம் கானல்
அடையல் குருகே அடையல் எம் கானல்
(சிலப்.7:46)

மன்னன் வளவன் மதிற்புகார் வாழ் வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ் வேந்தன்
(சிலப்.17:30)

மன்னன் கோச்சேரன் வளவஞ்சி வாழ் வேந்தன்
மன்னன் கோச்சேரன் வளவஞ்சி வாழ் வேந்தன் ***(சிலப்.17:31)***

கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
(சிலப்.18:26,27)

பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல் ***(சிலப்.19:51,53)***

சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல் ***(சிலப்.19:54,55)***

தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல் ***(சிலப்.19:57,59)***

கணவனை இழந்தாள் கடை அகத்தாளே
கணவனை இழந்தாள் கடை அகத்தாளே
(சிலப்.20:42,43)

தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
(சிலப்.24:12)

தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே
(சிலப்.24:15)

இவ்வமைப்புப் போலவே, இன்னோர் அமைப்பும் சிலப்பதிகாரத்தில் பயின்று வருகின்றது. முதல் அடி, மீண்டும் அடுத்த அடியில் பயின்று வரும்போது இறுதிச் சீர்

மட்டும் வேறொரு சீராக இருப்பதைக் காணலாம். இந்த இறுதிச் சீர் காரணப் பொருளுக்காகவும் அடுத்து வரும் அடியை அவாவி நின்று பொருளுணர்த்துவதற்காகவும் வரப்பெற்றுள்ளது.

தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து
தேசிகத் திருவின் ஓசை எல்லாம்
(சிலப்.3:30,31)

கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாது ஒழிதல் (சிலப்.7:2)

கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாது ஒழிதல் (சிலப்.7:3)

விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்த எல்லாம் (சிலப்.7:4)

கருங்கயல் கண் விழித்து ஒல்கி நடந்தாய் வாழி காவேரி
கருங்கயல் கண் விழித்து ஒல்கி நடந்த எல்லாம் நின் கணவன் (சிலப்.7:25)

காமர் மாலை அருகு அசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகு அசைய நடந்த எல்லாம் நின் கணவன் (சிலப்.7:26)

ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும் (சிலப்.7:27)

தெளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று என் செய்கோ
தெளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று எம்மோடு (சிலப்.7:34)

ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் வாழி கடல் ஓதம்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய்
(சிலப்.7:36)

பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனார்
(சிலப்.7:43)

நீ நல்கு என்றே நின்றார் ஒருவர்
நீ நல்கு என்றே நின்றார் (சிலப்.7:44)

நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் (சிலப்.7:45)

இட்டசித்தி எய்துவிர் ஆயின்
இட்டசித்தி எய்துவிர் நீரே
(சிலப்.11:102,103)

வெட்சி மலர் புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டும் போலும்
வெட்சி மலர் புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டின் (சிலப்.12:!2)

புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார் நிரைகருதிப் போகும் காலை
(சிலப்.12:13)

அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சாயின் (சிலப்.18:17,18)

வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின் (சிலப்.18:21,22)

ஆயமட மகளிர் எல்லீருங் கேட்டீமின்
ஆயமட மகளிர் எல்லீருங் கேட்டைக்க
(சிலப்.18:48,49)

நின்றாள் நினைந்தாள் நெடுகயற்கண் நீர்சோர
நின்றாள் நினைந்தாள் நெடுகயற்கண் நீர் துடையா (சிலப்.19:74,74)

தீமுறை செய்தாளை ஏத்தி யாம் பாடுகம்
தீமுறை செய்தாளை ஏத்தி யாம் பாடுங்கால்
(சிலப்.24:22)

கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே
கான நறுவேங்கைக் கீழாள் (சிலப்.24:25)

ஓங்கரணம் காத்த உரவோன் யார்

அம்மானை
ஓங்கரணம் காத்த உரவோன் ....
(சிலப்.29:17)
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யார் அம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் .....
(சிலப்.29:18)
வடவரை மேல் வாள் வேங்கை ஒற்றினன் யார் அம்மானை
வடவரை மேல் வாள் வேங்கை ஒற்றினன்
(சிலப்.29:19)
தம்மனையிற் பாடும் தகையேலோர் அம்மானை
தம்மனையிற் பாடும் தகையெலாம் .....
(சிலப்.29:20)
கொம்மை வரிமுலை மேல் கூடவே அம்மானை
கொம்மை வரிமுலை மேல் கூடின் ....
(சிலப்.29:20)

சிலப்பதிகாரத்தில் திரும்பத் திரும்ப வரல் அமைப்பில் முதல் சீர் மற்றும் இரண்டாம் சீர் மாற்றம் பெற்றும் ஒரு சீர் குறைந்தும் வந்து ள்ள பிறிதோர் அமைப்பையும் காணலாம்.

நாமநீர் வேலி உலகு (சிலப்.1:8)
வீங்குநீர் வேலி உலகு (சிலப்.1:11)
சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே
திருமால்சீர் கேளாத செவி என்ன செவியே
(சிலப்.17:35)
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே
(சிலப்.17:37)
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்து அடித்துமே
தேவர்ஆர மார்பன் வாழ்க என்று பந்து அடித்துமே (சிலப்.29:21)
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்து அடித்துமே
தேவர்ஆர மார்பன் வாழ்க என்று பந்து அடித்துமே (சிலப்.29:22)
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்து அடித்துமே
தேவர்ஆர மார்பன் வாழ்க என்று பந்து அடித்துமே (சிலப்.29:23)

ஓர் அடி மட்டும் அல்லாமல் ஓரடியில் இரண்டு சீர்கள் அல்லது மூன்று சீர்கள் அடுத்த அடியில் திரும்ப வரும் மற்றோர் அமைப்பையும் காணலாம்.

பொற்றொடி மாதர்
பொற்றொடி மாதர் (சிலப்.12:14)
பையரவு அல்குல்
பையரவு அல்குல் (சிலப்.12:5)
ஆய்தொடி நல்லாள்
ஆய்தொடி நல்லாள் (சிலப்.12:6)
அறுவை ஒளித்தான்
அறுவை ஒளித்தான் (சிலப்.17:23)
காதற் கணவனை
காதற் கணவனை (சிலப்.19:10,11)
தீதறு நல்உரை
தீதறு நல்உரை (சிலப்.19:12,13)
நெஞ்சம் கவர்ந்தாள் நிறை
நெஞ்சம் கவர்ந்தாள் நிறையும் (சிலப்.17:24)
கையில் ஒளித்தாள் முகம்
கையில் ஒளித்தாள் முகம் (சிலப்.17:25)
தேவர் கோன் பூணாரம்
தேவர் கோன் பூணாரம் (சிலப்.17:29)
ஆடுதுமே தோழி ஆடுதுமே தோழி
(சிலப்.24:3)
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனல் (சிலப்.24:4)
பொன்னாடி வந்த புதுப்புனல்
பொன்னாடி வந்த புதுப்புனல்
(சிலப்.24:5)
போதாடி வந்த புதுப்புனல்
போதாடி வந்த புதுப்புனல் (சிலப்.24:6)
பெற்றி உடையதே பெற்றி உடையதே
(சிலப்.24:25)

அடுக்கிக் கூறல்

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் ஒரு சொல் அடுக்கு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். புலவர்கள் இசைநிறை, அசைநிலை,

பொருளொடு புணர்தல் ஆகிய மூன்று நிலைகளில் ஒரு சொல் அடுக்கு மொழியைப் பயன்படுத்துகின்றனர். இதனை,

இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல் என்று
அவை மூன்று என்ப ஒருசொல் அடுக்கே
(தொல்.சொல்.411)

என்ற நூற்பா உறுதிப்படுத்தும்.

அறிவிப் பாயே அறிவிப் பாயே (சிலப்.20:28) - ஏ - விரைவு
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே (சிலப்.24:11) - விளித்தல் மரபு - ஏ - ஈற்றசை

ஒரு சொல் அடுக்கு

ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வருவதைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

மன்னோ - இடைச்சொல் அடுக்கி வரல்
மாதரார் தொழுதுஏத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ (சிலப்.1:28,29)
.... இசைபோக்கிக் காதலாள்
கொண்டு ஏத்தும் கிழமையான் கோவலன் என்பான் மன்னோ
(சிலப்.1:38,39)

கொல் - இடைச்சொல் அடுக்கி வரல்

பிறிதுஅணி அணியப் பெற்றதை எவன்கொல்
(சிலப்.2:64)
எல்அவிழ் மாலையொடு என் உற்றனர் கொல்
(சிலப்.2:66)
மன்மதச் சாந்தொடு வந்ததை எவன்கொல்
(சிலப்.2:68)
ஒருகாழ் முத்தமொடு உற்றதை எவன்கொல் (சிலப்.2:70)
இங்குஇவை அணிந்தனர் என் உற்றனர் கொல் (சிலப்.2:72)

என்கோ - அடுக்கி வரல்

மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
(சிலப்.2:77-79)

களைதல் - அடுக்கி வரல்

கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரம் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை ஆடலிற் களைதலும்
ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
(சிலப்.3:20-23)

இழைப்ப - அடுக்கி வரல்

பவள வாள் நுதல் திலகம் இழப்பத்
தவள வாள் நகை கோவலன் இழப்ப
(சிலப்.4:54,55)

கோயிலும் - அடுக்கி வரல்

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
(சிலப்.5:169-173)
அருந்தெறல் கடவுள் அகன்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேர்இசைக் கோயிலும் (சிலப்.13:137,138)

பாடலும் - அடுக்கி வரல்

நாரதன் வீணை நயம்தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரப் பாடலும்
(சிலப்.6:18,19)

விளக்கமும் - அடுக்கி வரல்

பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத்து ஊழ்உறு விளக்கமும்
கூவியர் கார்அகல் குடக்கால் விளக்கமும்
நொடைநவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடைஇடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்

இலங்குநீர் வரைப்பின் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்திமில் விளக்கமும்
மொழிபெயர் தேஎத்தோர் ஒழியா விளக்கமும்
கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்
(சிலப்.6:135-144)

ஆகவும் - அடுக்கி வரல்

உழை முதல் ஆகவும் உழைஈறு ஆகவும்
குரல் முதல் ஆகவும் குரல் ஈறு ஆகவும்
(சிலப்.7:37,38)

பாவை - அடுக்கி வரல்

பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை
(சிலப்.12:70,71)

போலும் - அடுக்கி வரல்

.... வாளமலை ஆடும் போலும்
..... காட்டும் போலும் (சிலப்.12:11)
.... உழத்தியும் வேண்டும் போலும்
..... குரல் இசைத்துக் காட்டும் போலும்
(சிலப்.12:12)
.... நிரைகருதிப் போகும் போலும்
.... கொடுமரமுன் செல்லும் போலும்
(சிலப்.12:13)

ஒழியவும் - அடுக்கி வரல்

சீர்இள வனமுலை சேராது ஒழியவும்
(சிலப்.13:20)
போதுசேர் பூங்குழல் பொருந்தாது ஒழியவும் (சிலப்.13:22)
செந்தளிர் மேனி சேராது ஒழியவும்
(சிலப்.13:24)

கிடப்பதோ - அடுக்கி வரல்

பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ (சிலப்.19:40)
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ (சிலப்.19:44)
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ (சிலப்.19:48)

இரு சொல் அடுக்கு

இரண்டு சொற்கள் அடுக்கி வரும் பாங்கினைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

இழவல் கண்டாய் - அடுக்கி வரல்

..... இடை இழவல் கண்டாய்
(சிலப்.7:17)
.... நுசுப்பு இழவல் கண்டாய்
(சிலப்.7:18)
...... மருங்கு இழவல் கண்டாய்
(சிலப்.7:19)

முன்றில் நிறைந்தன - அடுக்கி வரல்

நல்லியாழ்ப் பாணர் தம் முன்றில் நிறைந்தன (சிலப்.12:14)
புள்வாய்ப்புச் சொன்ன கணி முன்றில் நிறைந்தன (சிலப்.12:15)
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன
(சிலப்.12:16)

மூன்று சொல் அடுக்கு

மூன்று சொற்கள் அடுக்கி வருவதைச் சிலப்பதிகாரத்தில் பார்க்கலாம்.

எனைஇடர் செய்தவையே - அடுக்கி வரல்

எழுதுஅரும் மின்இடையே எனைஇடர் செய்தவையே (சிலப்.7:14)
இருகயல் இணைவிழியே எனைஇடர் செய்தவையே (சிலப்.7:15)
இளையவள் இணைமுலையே எனைஇடர் செய்தவையே (சிலப்.7:16)

உலாவு கடற் சேர்ப்ப - அடுக்கி வரல்

.... திரை உலாவு கடற்சேர்ப்ப
(சிலப்.7:37)
..... கரை உலாவு கடற்சேர்ப்ப
(சிலப்.7:38)

ஒரு பொருள் மேல் அடுக்கி வரல்

தொல்காப்பியம் குறிப்பிடும் தாழிசை அமைப்பு ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவதைக் காட்டும். ஒத்து மூன்று ஆகும் ஒத்தாழிசையே (தொல்.பொருள்.446) என்று தொல்காப்பியம் கூறுகின்றது. தம்முள் அளவொத்து மூன்றாகி வருவது தாழிசை ஆகும். சிலப்பதிகாரக் கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளில் இவ்வமைப்பைக் காணலாம்.

கானல் வரியில் மங்கு திணைநிலை வரியில் தாய் அறிவுறுத்தி வரைவுகடாதலாக இவ்வமைப்பு வந்துள்ளது. தாய் அறிந்தால் யான் என்ன செய்வேனோ? என்ற ஒரு பொருளைக் குறிப்பதற்காக அடுக்கிச் சொல்லுதல் அமைப்பைப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

நின் நித்தித்தின் பூண் அணிந்து
நலம்சார் பவளக்கலை உடுத்துச்
செந்நெல் பழனக் கழனிதொறும்
திரை உலாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத் திண்
கொடியோன் எய்த புதுப்புண்கள்
என்னைக் காணா வகை மறைத்தால்
அன்னை காணின் என் செய்கோ?
(சிலப்.7:37)

வாரித் தரள நகை செய்து
வண் செம்பவள வாய் மலர்ந்து
சேரிப் பரதர் வலை முன்றில்
கரை உலாவு கடற்சேர்ப்ப
மாரிப் பீரத்து அலர் வண்ணம்
மடவாள் கொள்ள கடவுள் வரைந்து
ஆர் இக்கொடுமை செய்தார் என்று
அன்னை அறியின் என் செய்கோ?
(சிலப்.7:38)

புலவுற்று இரங்கி அது நீங்க
பொழில் தண்டலையில் புகுந்து உதிர்ந்த
கலவைச் செம்மல் மணம் கமழ
கரை உலாவு கடற்சேர்ப்ப
பலஉற்று ஒருநோய் துணியாத
படர்நோய் மடவோள் தனிஉழப்ப
அலவுற்று இரங்கி அறியா நோய்
அன்னை அறியின் என் செய்கோ?
(சிலப்.7:39)

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் இடம்பெறும் மாயவனைப் பற்றிய பாடல் (கண்ணன்) ஒருபொருள் மூன்று அடுக்கி வருவதாக அமைந்துள்ளது.

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையம் தீம்குழல் கேளாமோ தோழீ
(சிலப்.17:19)

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்கு நம்மானுள் வருமேல் அவன்வாயிற்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ
(சிலப்.17:20)

கொல்லையம் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லை நம்மானுள் வருமேல் அவன்வாயிற்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ
(சிலப்.17:21)

இதைப் போலவே, படர்க்கைப் பரவல் என்ற தலைப்பில் அமைந்த பின்வரும் பாடல்களும் ஒரு பொருள் தழுவிய அடிகளாகவே திரும்ப வந்துள்ளன என்பது கண்கூடு.

மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான் போந்து
சோஅரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே (சிலப்.17:35)
பெரியவனை மாயவனைப் பேர்உலகம் எல்லாம்
விரிகமல உந்திடை விண்ணவனைக் கண்ணும்

திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே (சிலப்.17:36)
மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நா என்ன நாவே
நாராயண என்னா நா என்ன நாவே
(சிலப்.17:37)

விளித்தல் மரபு

பெயரோடு தெளியத் தோன்றும் விளிச்சொற்களின் பயன்பாட்டை உணர்ந்த தொல்காப்பியர், விளிமரபு (தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - நான்காம் இயல்) என்னும் ஓர் இயலையே ஆக்கியுள்ளார்.

இளங்கோ ஒரு கருத்தினை நேரடியாகக் கூறுவதற்காக விளித்தல் மரபைப் பயன் படுத்தியுள்ளார். உரையாடலுக்கு இடம் கொடுக்கும்போது இத்தகைய விளித்தல் தோன்றக் காணலாம். அதுமட்டுமின்றிக் கேட்போரது கவனத்தை ஈர்ப்பதற்காகவும் விளித்தல் மரபை இளங்கோ பயன்படுத்தி இருக்கலாம். இவற்றின் இயல்புகளைப் பற்றி ச.அகத்தியலிங்கம் கூறுகையில், சக்தி வாய்ந்த விளிச்சொற்களை மிக லாவகமாகக் கவிஞர்கள் கையாண்டுள்ளனர். பொருள் அடிப்படையில் இது அதிகமான வேறுபாட்டை உண்டாக்கவில்லை யாயினும் கவிதையின் உருவ ஆக்கநிலையில் (form) இதனை ஒரு சிறந்த உத்தியாகவே கருத வேண்டும் *(2011:134)* என்கின்றார். உணர்வினைத் தரும் விளித்தல் மரபைச் சிலப்பதிகாரத்தில் பின்வரும் நிலைகளில் காணலாம்.

அவையாவன:

1. ஒரு சொல் விளி
2. ஓரிரு சொல் விளி (பலசொல் விளி)
3. நீண்ட தொடர்களைக் கொண்ட விளி
4. அடுக்கு விளி என்பனவாகும்.

ஒரு சொல் விளி

..... ஐய
வீங்குஓதம் தந்து விலங்கு ஒளிய
வெண்முத்தம் (சிலப்.7:28)
..... ஐய
நிறைமதியும் மீனும் என (சிலப்.7:29)
..... ஐய
வண்டல் நிரை அழிப்பக் கையால் மணல் முகந்து (சிலப்.7:30)
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால் (சிலப்.7:32)
இன்கள் வாய் நெய்தால் (சிலப்.7:33)
.... ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்து ஆடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே (சிலப்.7:53)
திரை உலாவு கடற்சேர்ப்ப (சிலப்.7:37)
தளைஅவிழ் மலர்க் குழலாய் (சிலப்.7:40)
புதுமதி புரை முகத்தாய் (சிலப்.7:41)
துறுமலர் அவிழ் குழலாய் (சிலப்.7:43)
செறிதொடீஇ தீக்குற்றம் (சிலப்.9:52)
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும் உடையீர் (சிலப்.10:47,48)
உரையாட்டு இல்லை உறுதவத்தீர் (சிலப்.10:50)
கயல்நெடுங் கண்ணி காதற் கேள்வ (சிலப்.10:76)
நோற்று உணல் யாக்கை நொசி தவத்தீர் (சிலப்.10:223)
இட்டசித்தி எய்துவீர் நீரே (சிலப்.11:103)
நலம்புரி கொள்கை நான்மறை யாள (சிலப்.11:152)

கடக்களிறு அடக்கிய கருணை மறவ (சிலப்.15:53)
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ (சிலப்.15:75)
உரியது ஒன்று உரைமின் உறுபடையீர் (சிலப்.16:211)
எல்லா ஓ (சிலப்.18:11)
ஏதிலார் சொன்னது எவன் வாழியோ தோழீ (சிலப்.18:15)
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள் (சிலப்.19:4)
கடைமணி யின்குரல் காண்பென் காண் எல்லா (சிலப்.20:3)
தென்னம் பொருப்பின் தலைவ வாழி (சிலப்.20:30)
செழிய வாழி தென்னவ வாழி (சிலப்.20:32)
தேரா மன்னா (சிலப்.20:49)
சூழ்கழல் மன்னா (சிலப்.20:59)
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே (சிலப்.20:65)
கேட்டிசின் வாழி நங்கை (சிலப்.23:17)
தோழீ நீ ஈதொன்று கேட்டி (சிலப்.23:27)
குண்டப் பார்ப்பீர் என்னோடு ஓதி (சிலப்.23:88)
பாடுகம் வா தோழி (சிலப்.24:7)
.... உரைத்தது கேள் வாழி தோழி (சிலப்.24:19)
கொல்லி ஆண்ட குடவர் கோவே (சிலப்.24:30)
.... வாழ்க நின் கொற்றம் (சிலப்.24:56)
...... கொற்ற வேந்தே (சிலப்.26:69)
வாழ்க எங்கோ (சிலப்.27:49)
நான்மறை யாளா (சிலப்.27:54)
குடவர் கோவே (சிலப்.27:64)
காவல் வேந்தே (சிலப்.28:154)
செங்கோல் வேந்தே (சிலப்.28:157)
கேளிது மன்னா கெடுக நின் தீயது (சிலப்.30:73)
மன்னர் கோவே (சிலப்.30:95)

இருசொல் விளி

வாயிலோயே வாயிலோயே (சிலப்.20:23)
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே (சிலப்.24:11)
மண்ணாள் வேந்தே வாழ்க (சிலப்.27:150)
எங்கோ வேந்தே வாழ்க (சிலப்.27:162)

நீண்ட தொடர்களைக் கொண்ட விளி

மாமறை முதல்வ மதுரைச் செந்நெறி கூறு நீ (சிலப்.11:58,59)
மாதரி கேள் இம்மடந்தை தன் கணவன் தாதையைக் கேட்கின் .... கடிமனைப் படுத்துவர் (சிலப்.15:125-128)
கோல்வளை மாதே கொள்க எனக் கொடுப்ப (சிலப்.16:28)
கொன்றையம் தீம்குழல் கேளாமோ தோழீ (சிலப்.17:19)
ஆம்பலர் தீம்குழல் கேளாமோ தோழீ (சிலப்.17:20)
முல்லையந் தீம்குழல் கேளாமோ தோழீ (சிலப்.17:21)
நாராயணா என்னா நாவென்ன நாவே (சிலப்.17:37)
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன் (சிலப்.18:51)
வெந்திறல் வேந்தே வாழ்க நின் கொற்றம் (சிலப்.26:27)
நெடுந்தார் வேய்ந்த பெரும்படை வேந்தே (சிலப்.28:122)
சோணாட்டார் பாவைக்குத் தோழி நான் கண்டீர் (சிலப்.29:2)
என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம் (சிலப்.29:10)
வஞ்சியீர் வஞ்சி இடையீர் மறவேலான் பஞ்சடி ஆயத்தீர் எல்லீரும் வம்மெல்லாம் (சிலப்.29:11)
.... நீடுழி செங்குட்டுவன் வாழ்க (சிலப்.29:30)
யான் பெறு மகளே என்துணைத் தோழீ (சிலப்.30:102)
எந்தாய் இளையாய் எங்கு ஒளித் தாயோ (சிலப்.30:103)

அடுக்கு விளி

பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
(சிலப்16:89-91)

அரைச ரேறே அமைக நின் சீற்றம்
மண்ணாள் வேந்தே நின் வாழ் நாட்கள்
தண்ணான் பொருநை மணலினும் சிறக்க
ஆழ்கடன் ஞாலம் ஆள்வோய் வாழி
(சிலப்.28:124-127)

அடைமொழிகள்

'அடை' என்ற சொல்லிற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 'ஒரு பெயர்ச் சொல்லுக்கு அல்லது வினைச்சொல்லுக்கு முன் வந்து அதை விவரிக்கும் சொல்' என்று விளக்கம் தருகின்றது. தொல்காப்பியர் அடை மொழிகளின் இயல்பு பற்றிக் கூறுகையில்,

அடைசினை முதல்என முறை மூன்று மயங்காமை
நடைபெற்று இயலும் வண்ணச் சினைச்சொல் (தொல்.509)

என்கின்றார். இந்நூற்பாவின் மூலம் முதல் பொருளையும் சினைப் பொருளையும் சிறப்பிக்க வருவது அடை என்பதைத் தெளியலாம்.

மேற்கத்திய இலக்கணங்கள் சொல் வகைகளுள் ஒன்றாகப் பெயரடையைக் கூறுகின்றன. பெயரடை என்பது பெயர்ச் சொற்களைச் சிறப்பிக்க வரும் வடிவமாகும். இது பெரும்பாலும் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் வரப்பெறும். பெயரடைகள் பற்றி, பீ.மு.அஜ்மல்கான் கூறுகையில், சமுதாய வழக்கில் சொற்றொடர் நிலையில் பெயரைத் தழுவி அதனைச் சிறப்பித்து (quality) நிற்கும் மொழி வடிவங்களைப் பெயரடைகள் என்று கூறலாம். பெயரடைகள் பெயரைத் தழுவி நின்றாலும் அவை பெயரின் பால், எண் வேறுபாடுகளுக்கு ஏற்ப மாற்றம் பெறுவதில்லை (பீ.மு.அஜ்மல்கான்,1977:63) என்கின்றார். சிலப்பதிகாரத்தில் ஒரு பொருளின் அல்லது நபரின்சிறப்புகளை வருணனைப் படுத்துவதற்காக வரக் கூடியவையாக அடைமொழிகள் அமைந்துள்ளன. வாய்மொழி வாய்பாட்டு மரபில் இவ்அடைமொழிகளே மிகுதியாகப் பயின்று வருகின்றன. இவை பற்றிய க.கைலாசபதியின் கூற்று இவண் நினைக்கத்தக்கது. அடைமொழிகள் வாய்மொழிப் புலவனுக்குச் செய்து வைக்கப்பட்ட ஆயத்தக் கூறுகளாக இருந்து ஓரடியின் பகுதியை உருவாக்கப் பயன்பட்டன என்ற உண்மை குறித்தற்குரியது (க.கைலாசபதி,2006:225).

மேற்குறிப்பிட்ட விளக்கங்களிலிருந்து பெயரடைகளின் இயல்புகளைப் பின்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம்.

1. பெயரைச் சிறப்பிக்க வருதல்.
2. அகர விகுதி பெற்று வருதல். (தொடக்கத்தில் இந்நிலையில் இல்லை)
3. பெயருக்கு முன்னால் நிற்றல்.
4. பெயரின் பண்பை உணர்த்தல் என்பன.

கண் என்ற பெயருக்கு வழங்கப்படும் அடைகள்

சிலப்பதிகாரத்தில் கண் என்ற பெயருக்கு மட்டும் நெடுங்..., கருங்..., கயற்..., செங்..., வேல்..., கடுங்...., உண்... ஆகிய அடைமொழிகள் பயின்று வந்துள்ளன. இவ்அடைமொழிகள் ஒரு சொல்லாகவும் தொடர் சொல்லாகவும் அமைந்துள்ளன.

செங்கயல் நெடுங்கண் (சிலப்.4:53),
(சிலப்.15:132), (சிலப்.27:182)
கருங்கயல் நெடுங்கண் (சிலப்.6:3),
(சிலப்.13:166)
கருங்கண் (சிலப்.5:237)
செங்கண் (சிலப்.5:237), (சிலப்.11:24), (சிலப்.11:51), (சிலப்.18:32)
மாமலர் நெடுங்கண் (சிலப்.6:174)
மைத்தடங்கண் (சிலப்.7:2)
கயற்கண் (சிலப்.7:3)
கரிய மலர் நெடுங்கண் (சிலப்.7:5)
கொலை வேல் நெடுங்கண் (சிலப்.7:10)
கறைகெழு வேல் கண் (சிலப்.7:12)

கருங்கயல் கண் (சிலப்.7:25)
மாமலர் நெடுங்கண் (சிலப்.8:16)
வேல்அரி நெடுங்கண் (சிலப்.8:72)
பூவந்த உண்கண் (சிலப்.9:34)
கருநெடுங் கண் (சிலப்.9: வெண்பா)
கயல்நெடுங் கண் (சிலப்.10:76)
செங்கயல் நெடுங்கண் (சிலப்.10:130)
கருந்தடங் கண் (சிலப்.11:166)
கயமலர் உண்கண் (சிலப்.12:16)
பூங்கண் (சிலப்.15:116)
செங்கண் (சிலப்.16:31)
சிந்தரி நெடுங்கண் (சிலப்.16:138)
வேல் நெடுங்கண் (சிலப்.17:5)
ஐயரி உண்கண் (சிலப்.19:25)
நெடுங் கயற்கண் (சிலப்.19:73)
கடுங்கண் கூற்றம் (சிலப்.25:164)
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண் (சிலப்.30:12)

மேற்குறிப்பிட்ட அடிகளில் கண் என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் பல அடைமொழிகள் பயின்று வருகின்றன.

பொழில் என்ற பெயருக்கு வழங்கப்படும் அடைகள்

கள்அவிழ் பூம்பொழில் (சிலப்.6:2)
தாதுஅவிழ் பூம்பொழில் (சிலப்.6:68)
மிடைதரு பொழில் (சிலப்.7:15)
மணம்விரி தருபொழில் (சிலப்.7:16)
பூந்தண் பொழில் (சிலப்.7:35)
காரணி பூம்பொழில் (சிலப்.10:214)
கொங்குஅலர் பூம்பொழில் (சிலப்.10:220)
அந்தில் அரங்கத்து அகன்பொழில் (சிலப்.11:6)
தேம்பொழில் (சிலப்.11:142)
விரவியபூம்பொழில் (சிலப்.11:208,209)
தேமலர் நறும்பொழில் (சிலப்.13:180)
கடிபொழில் (சிலப்.23:11)

அளவை உணர்த்தும் பெயரடைகள்

அளவை உணர்த்தும் பெயரடைகளாக, சிறு -, குறு -, பெரிய -, பெரு -, நெடு -, ஓங்கு-, நீள் -, உயர் - ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சிறு... அடைமொழியாக வரல்

சிறுபசுங் கிளியே (சிலப்.2:57)
சிறுவெள் அரவு (சிலப்.12:22)
சிறுநுதல் (சிலப்.14:143)
சிறுமுதுக் குறைவி (சிலப்.16:68)
சீறடி (சிலப்.16:92)
சிறுகுடில் (சிலப்.16:124)
சிறுகுறுங்கூன் (சிலப்.27:214)
சிறுமகள் (சிலப்.30:135)

குறு.... அடையாக வரல்

குறுமுயல் (சிலப்.5:204)
குறுநெறிக் கூந்தல் (சிலப்.12:23)
குறுங்கண் (சிலப்.14:101)
குறுநடை புறவு (சிலப்.27:166)
சிறுகுறுங்கூன் (சிலப்.27:214)
குறுந்தொடி மகளிர் (சிலப்.30:114)

பெரு.... அடைமொழியாக வரல்

பெரு... என்ற சொல் அடைமொழியாகக் குணம், வீதி, தோள், சேடி, பூதம், கற்பு, பதி, கோடு, வாணிகர், மழை, மலை, களிறு, சோறு உள்ளிட்ட சொற்களைச் சிறப்பிக்க சிலப்பதிகாரத்தில் பயின்று வருகின்றது.

பெருங்குணம் (சிலப்.1:)
அகன்பெரு வீதி (சிலப்.5:47)
பெருங்குடி வாணிகர் (சிலப்.5:41)
ஒருபெருஞ் சேனை (சிலப்.5:224)
பெருந்தோள் (சிலப்.5:227)
வியன் பெருஞ்சேடி (சிலப்.6:1)
மாபெரும் பூதம் (சிலப்.6:11)
பெருங்கற்பு (சிலப்.7:1)
பெரும்பதி (சிலப்.9:46)
வடபெருங்கோடு (சிலப்.10:35)
பெருமழை (சிலப்.11:27)
பெருமலை (சிலப்.25:22)
பெருங்களிறு (சிலப்.26:43)
பெருஞ்சோறு (சிலப்.26:49)

நெடு.... அடைமொழி

சிலப்பதிகாரத்தில் 'நெடு' அடைமொழி மாடம், வரை, தேர், குளம், துறை, மலை, வேல்,

மொழி, வேள், கண் முதலிய பெயர்ச் சொற்களைச் சிறப்பிக்க பயன்படுத்தப் பட்டுள்ளது.

நெடுநிலை மாடம் (சிலப்.1)
நெடுவரை (சிலப்.3)
நெடுவெண் முற்றம் (சிலப்.4)
நெடுந்தேர் (சிலப்.5:53), (சிலப்.26:132)
நெடுந்திண் தேர் (சிலப்.7:36)
நெடுங்கடை (சிலப்.9:8)
நெடும்பொன் குன்றம் (சிலப்.11:35)
நெடுங்குளக் கோட்டம் (சிலப்.11:71)
நெடுவழி (சிலப்.11:125)
நெடுந்துறை (சிலப்.11:170)
நெடுமலை (சிலப்.12:57)
நெடுவேல் (சிலப்.25:64)
நெடுமொழி (சிலப்.25:82)
நெடுங்கண் (சிலப்.27:182)
நெடுவேள் (சிலப்.28:42)

ஓங்கு ... அடையாக வரல்

ஓங்கு உயர் மலையத்து (சிலப்.11:42)
ஓங்கு நீர் மாடம் (சிலப்.14:74)
ஓங்குசீர் மதுரை (சிலப்.28:220)
ஓங்கியநன் மணி (சிலப்.30:30)

நீள்.... அடைமொழியாக வரல்

நீள்நிலம் (சிலப்.11:148), (சிலப்.28:23)
நீள்நெறி (சிலப்.11:161)
நீள்நில மகளிர் (சிலப்.28:30)

உயர்.... அடையாக வரல்

உயர்வரை (சிலப்.30:54)

பண்பை உணர்த்தும் பெயரடைகள்

மெல் -, நல் - , பைந் - , செந் - , வெண் - , பைஞ் - , பைந் - , கருங் - , பசுங் - , வெள் -, செம் -, மென் -, மால் -, நறுங் -, செங் - முதலிய பெயரடைகள் பெயர்ச்சொற்களின் பண்பை உணர்த்தி நிற்கின்றன.

நல் (நன்)... அடைமொழியாக வரல்

நன்மொழி (சிலப்.11:7)
நல்வெற்றங் கொடுத்து (சிலப்.11:211)
நன்பெரு வேள்வி (சிலப்.28:199)
நன்னாடு (சிலப்.28:220)

வெண்.... அடைமொழியாக வரல்

வெண்குடை (சிலப்.1:1), (சிலப்.26:73)
வெண்பிறை (சிலப்.4)
வெண்குடையான் (சிலப்.7:1)
வெண்குடை (சிலப்.7:50)
வெண்மதி (சிலப்.7:5)
வெண்பூ மல்லிகை (சிலப்.8:46)
வெள்யானை (சிலப்.9:9)
பால்வெண் சங்கம் (சிலப்.11:47)
வெண்முத்து (சிலப்.11:185)
வெண்நிலா (சிலப்.11:185)
சிறுவெள் அரவு (சிலப்.12:22)
வளைவெண் கோடு (சிலப்.12:25)
முளைவெண் திங்கள் (சிலப்.12:26)
வெண்பல் (சிலப்.12:28)
வெண்தோடு (சிலப்.12:54)
வெண்பொரி (சிலப்.12:20)
வெண்குன்று (சிலப்.24:8)
வெண்கோட்டு யானை (சிலப்.26:199)

மேற்காட்டிய சான்றுகளில் வெண் (வெண்மை) அடைமொழியாகக் குடை, பிறை, மதி, யானை, சங்கம் (சங்கு), முத்து, நிலா, அரவு, கோடு, திங்கள், பல், தோடு, பொரி, குன்று உள்ளிட்ட பெயர்களைச் சிறப்பிக்கபயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வெண் என்பதன் மாற்று வடிவமான வெள்.... என்பதும் அடையாக வந்துள்ளது.

கரு.... என்ற அடைமொழி

கரு... என்ற அடைமொழி கருமை நிறத்தைக் குறிப்பதற்காகச் சிலப்பதிகாரத்தில் முகில், கயல், கண் ஆகிய சொற்களைச் சிறப்பிக்க பெயரடையாக வந்துள்ளது.

கருமுகில் (சிலப்.5:204)
கருங்கயல் (சிலப்.5:205)
கருநெடுங் குவளை (சிலப்.5:215)
கருங்கண் (சிலப்.5:237)
எருமைக் கருந்தலை (சிலப்.12:7)
கருவிரல் குரங்கு (சிலப்.15:158)

செம்... என்ற அடைமொழி

சிவந்தநிறத்தைக்குறிக்கும்செம்..., செஞ்..., செவ்..., செங்..., செந்..., சே... உள்ளிட்ட மாற்று வடிவங்கள் ஒரு பெயர்ச்சொல்லின் பண்பை உணர்த்த இளங்கோவால் கையாளப்பட்டுள்ளன.

செம்மலர்க் கண்கள் (சிலப்.4:5)
அஞ்செஞ்சீறடி (சிலப்.4:)
செவ்வாய் (சிலப்.6:26), (சிலப்.7:28)
செங்கோல் (சிலப்.7:1)
செங்கை (சிலப்.7:29)
வண்செம்பவள வாய் (சிலப்.7:38)
செந்தாமரை (சிலப்.8:1)
அம்செங்கழுநீர் (சிலப்.8:47)
செங்கதிர் ஞாயிறு (சிலப்.11:2)
செங்கண் (சிலப்.11:24)
சேவடி (சிலப்.11:106)
செந்தளிர் மேனி (சிலப்.13:24)
செங்கோடு (சிலப்.24:8), (சிலப்.30:54)
செஞ்சிலம்பு (சிலப்.25:72)
செஞ்சடை (சிலப்.26:98)
செந்தீ (சிலப்.27:145)
செங்களம் (சிலப்.29:5)

பைந்.... அடைமொழியாக...

சிலப்பதிகாரத்தில் பசுமை என்ற பொருளில் பைந்... என்ற அடைமொழி பயன்படுத்தப்பட்டுள்ளது.

பைந்தளிர்ப் படலை (சிலப்.4:41)
பைம்பொன் வேதிகை (சிலப்.5:154)
பைந்தளிர் ஆரம் (சிலப்.13:23)
பைம்பூண் (சிலப்.16:10)
பைங்காழ் ஆரம் (சிலப்.22:124)
பைந்தொடிப் பாவை (சிலப்.29:12)
பைந்தொடி நங்கை (சிலப்.30:35)

பசுங்.... அடைமொழியாக

பசும்பொன் (சிலப்.3:165)
பசுங்கொடிப் படாகை (சிலப்.14:216)

மால்... அடைமொழியாக....

தெய்வ மால்மரை (சிலப்.3:1)
உதய மால்வரை (சிலப்.5:5)
வெள்ளி மால்வரை (சிலப்.6:1)

உரிச்சொல்லாக வரும் பெயரடைகள்

உரிச்சொற்களாகக் கருதப்படும் உறு -, நனி -, கூர் -, கழி -, மல்லல் -, கடி -, கடு -, எல்-, கய -, வய -, தட -, வியன் - போன்றவை சிலப்பதிகாரத்தில்பெயரடைகளாகவருகின்றன.

உறுதவத்தீர் (சிலப்.10:50)
நனிசேய்த்து அன்று (சிலப்.13:133)
தாம்நனி எய்த (சிலப்.30:31)
கூர்உகிர் (சிலப்.3:52)
கழிபெரும் பண்டம் (சிலப்.6:144)
கழிபெருஞ் சிறப்பு (சிலப்.10:170)
மல்லல் மூதூர் (சிலப்.6:34)
கடிப்பகை (சிலப்.6:147), (சிலப்.30:54)
கடுங்கண் மறவர் (சிலப்.5:55)
கடுவிசை (சிலப்.6:7)
கடுங்குரல் ஏறு (சிலப்.10:104)
கடுங்கதிர் (சிலப்.12:1)
கடிமதில் வாயில் (சிலப்.14:66)
கடுந்தேர் (சிலப்.26:198)
கடும்படை (சிலப்.26:212)
எல்அவிழ் மாலை (சிலப்.2:66)
எல்வளை மகளிர் (சிலப்.4:19), (சிலப்.28:53)
கயமலர்க் கண்ணி (சிலப்.2:11)
வயப்புலி (சிலப்.12:27)
வயக்கரி (சிலப்.13:146)
தடக்கை (சிலப்.26:222)
வியன்பெருந் துருத்தி (சிலப்.11:39)
வியன்மார்பு (சிலப்.18:38)
வியன்படு தானை (சிலப்.26:7)
வியன்நிலம் (சிலப்.26:93)
வியன்நகர் (சிலப்.27:200)

எண்ணுப் பெயரடைகள்

ஒரு, ஓர், இரு, ஈர், ... எண் போன்ற கட்டு உருபுகள் (bound morphs) எண்ணுப் பெயரடைகளாக வருவதைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

ஒருதனி ஆழி உருட்டுவோன் (சிலப்.1:69)
ஒருகோல் உயரத்து (சிலப்.3:101)
ஒருமுக எழினி (சிலப்.3:110)

ஓர்குறியாக் கட்டுரை (சிலப்.2:37)
ஓர்செழும் பதி (சிலப்.6:5)
இருகரும் புருவம் (சிலப்.2:45)
மூவகை இயக்கம் (சிலப்.8:42)
நான்மறை (சிலப்.5:175)
நான்மாடக் கூடல் (சிலப்.21:39)
நால்வகை பாணி (சிலப்.6:36)
நால்வகைச் சாதி (சிலப்.8:41)
ஐம்பெருங்குழு (சிலப்.3:126)
ஐவகை மன்றத்து (சிலப்.5:140)
ஆறுஐங் கானம் (சிலப்.10:42)
அறுமுக ஒருவன் (சிலப்.2:49)
ஏழ்ஆண்டு இயற்றி ஓர்ஈர் ஆறு ஆண்டில் (சிலப்.3:10)
எழுகொல் அகலம் (சிலப்.3:101)
எண்கோல் நீளம் (சிலப்.3:101)
எண்கழஞ்சு (சிலப்.14:158)
ஒன்பது குடை (சிலப்.27:122)
ஒன்பது மன்னர் (சிலப்.27:119)
பதினோர் ஆடல் (சிலப்.3:14)
ஈரேழ் தோடுத்த (சிலப்.3:70)
ஈரேழ் சகோடமும் (சிலப்.10:15)
பன்னிரு மதியம் (சிலப்.10:243)

எண்ணிலாப் பெயரடைகள்

சிலப்பதிகாரத்தில் சில் -, சின் -, சில -, பல் -, பன் -, பல - என்பன எண்ணிலாப் பெயரடைகளாக வருகின்றன.

சின்மலர் கொடு தூவி (சிலப்.1:62)
யாண்டு சில கழிந்தன (சிலப்.2:89)
பல்இருங் கூந்தல் (சிலப்.2:65)
பல்லான் கோவலர் (சிலப்.16:98)
பல்யாண்டு வாழ்க (சிலப்.25:100)
பல்லாண்டு (சிலப்.28:54)
பன்மலர் (சிலப்.10:30), (சிலப்.13:154)
பன்மீன் தானை (சிலப்.13:17)

இறுவாய்

இக்கட்டுரையின் நிறைவாக, வாய்மொழி வாய்ப்பாட்டுக்கோட்பாட்டில் இடம்பெறும் ஒலி இயைபுத் திரும்புகைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அழகியல் கூறாகச் சிலப்பதிகாரத்தில் வெளிப்படுகின்றன. கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளில் இடம்பெறும் பாடல்கள் பெருக்குநிலை மறுபகர்ப்பு எனும் திருப்புகையை அடியொற்றியே அமைந்துள்ளன. இவற்றின் மூலமாக இளங்கோ ஒருவிதமான இழைவுக் கூறுகளை (Texture) உருவாக்கியுள்ளார் எனலாம். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஒருபொருள் தழுவிய அடிகள் திரும்ப வரல் அமைப்பு என்ற வாய்மொழிப் பாடற்கூறை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

நாற்சீர் கொண்ட அடியில் அடுக்கு மொழி என்பது தவிர்க்க இயலாத ஒன்று. படைப்பாளர் ஓரடியை அடுக்கிக் கூறுவதும் ஒரு சீரை அடுக்கிக் கூறுவதும் பாடலை நினைவில் வைத்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கும். இவ்வமைப்பையே இளங்கோவும் கையாண்டுள்ளார். இவ்வடுக்கு மொழிகள் இசைநிறை, அசைநிலை, பொருளோடு புணர்த்தல் என்ற மூன்று காரணங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பது தொல்காப்பியர் கூற்று. இக்கூற்றுச் சிலப்பதிகாரத்திலும் தென்படுகின்றது.

வாய்மொழி வாய்பாட்டு மரபில் தவிர்க்க முடியாத ஒரு கூறு விளித்தல் மரபாகும். படைப்பாளர் உரையாடல் அமைப்பிற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று நினைக்கும் போது இவ்விளித்தல் மரபைப் பயன்படுத்துகின்றார். அதற்கு இளங்கோவும் விதி விலக்கன்று. கண்ணகி - கோவலன் உரையாடல், கோவலன் - மாதவி உரையாடல், கண்ணகி - தேவந்தி உரையாடல், கவுந்தியடிகள் - கோவலன் உரையாடல், கவுந்தியடிகள் - மாதரி உரையாடல், வேட்டுவர் உரையாடல், ஆயர் உரையாடல், வாயிற் காவலன் - பாண்டிய மன்னன் உரையாடல், கண்ணகி - பாண்டிய மன்னன் உரையாடல், கண்ணகி - மதுராபதி உரையாடல், குன்றக் குறவர் உரையாடல், சேர செங்குட்டுவன் - அழும்பில்வேள்

உரையாடல் உள்ளிட்ட பகுதிகளில் இளங்கோவடிகள் விளித்தல் மரபைப் பயன் படுத்தியுள்ளார். இம்மரபை வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும் ஓர் உத்தியாகவும் நடையியல் உத்தியாகவும் கருத வாய்ப்புள்ளது.

பெயர்முன்அடைஅமைப்புவாய்மொழிப் பாடகர்களுக்குச் செய்து வைக்கப்பட்ட ஆயத்தக் கூறாக இருந்து ஓர் அடியின் ஒரு பகுதியை உருவாக்கிவிடுகின்றது. இவ்வமைப்பைச் சிலப்பதிகாரத்திலும் மேற்குறிப்பிட்ட தரவுகள் அடிப்படையில் காண நேர்கின்றது. குறிப்பிட்ட சில அடைமொழிகள் எல்லா வகையான இடங்களிலும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்தப் பெயர் அடைமொழிகள் செய்யுட்களில் மீண்டும் மீண்டும் எவ்விதமான மாற்றமுமின்றி இளங்கோவால் கையாளப்பட்டுள்ளன.

துணை நின்ற நூல்கள்

1. கைலாசபதி, க. தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, *2006.*
2. சண்முகசுந்தரம், சு. கண்ணகிக் கதைகள் - காலந்தோறும், காவ்யா, சென்னை, *2010.*
3. சுப்பிரமணியன், ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, *2009.*
4. சுப்பிரமணியன், பெ. சிலப்பதிகாரம் நாட்டுப்புறவியல் நோக்கு, காவ்யா, சென்னை, *2023.*
5. தமிழவன், வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, *2023.*
6. தனஞ்செயன், ஆ. சிலப்பதிகாரத்தில் நாட்டார் அழகியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, *2023.*
7. லூர்து, தே. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, *2008.*
8. ஜெயகிருஷ்ணன், ப. சிலப்பதிகாரமும் கண்ணகி வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, *2023.*